1981 பிப்ரவரி 4]

திரு. செ. இராமலிங்கம் : இதற்கு முன்பு வீடு இல்லாத அரிசன மக்களுக்கு இலவசமாக கான்கிரீட் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே குடிசைக்கு ஒரு விளக்கு என்ற திட்டத்தை அந்த கான்கிரீட் வீடுகளுக்கும் விஸ்தரிப்பதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் முன்பே கேட்டார்கள். இது குடிசைக்கு ஒரு விளக்கு. அவர்களே சொன்னார்கள் கான்கிரீட் வீடுகள் என்று. அவர்களுக்காவது கான்கிரீட் வீடு, குடிசை வீடுகளிலே உள்ளவர்களுக்கு ஒரு விளக்காவது தருகின்ற முறையிலே தான் இந்த குடிசைகளுக்கு ஒரு விளக்குத் திட்டம் கொண்டு வரப்படுகிறது.

அம்பாசமுத்திரம் தொகுதியில் நீர்மின் திட்டங்கள்

*வினா எண். 162—திரு. பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியில் மணிமுத்தாறு நீர்மின் திட்டம் ஒன்று நிறுவ அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் யாது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்காகும் செலவு என்ன? இதை ஆரம்பிப்பதற்கான ஆய்வுகள் எந்த நிலையில் முடிவடைந்திருக்கின்றன என்பதை தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இந்தத் திட்டத்திற்காகும் எஸ்டிமேட்ட் காஸ்ட் 34 கோடி ரூபாய். ஆனால் இந்தத் திட்டத்திலே என்ன பிரச்சினை என்றால் இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் அந்தப் பகுதியிலே இருக்கின்ற

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

காடுகளில் வாழ்கின்ற சிங்கவால் கொண்ட மகால் குரங்கு இனத்திற்கு அழிவு ஏற்படும் நிலைமை இருக்கிறது. ஏற்கனவே அது அழிந்துவரும் இனம் என்ற காரணத்தினாலே அந்த காடுகளை அழிக்க வேண்டாம் என்று வனத்துறை கேட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே அந்தத் திட்டம் தாமதமாகிக் கொண்டிருக்கிறது.

திரு. பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம் : தலைவர் அவர்களே, ஏற்கனவே குரங்குகள் அழிவதைத்தடுத்து பாதுகாப்பதற்காக இந்தத் திட்டம் தயக்கப்படுத்தப்படுகிறது என்றும், வனத்துறை ஆட்சேபிக்கிறது என்றும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த வாலில்லா குரங்குகள், இந்த மின் திட்டத்தை ஆரம்பிப்பதால் எங்கேயும் ஓடிவிடாது, அங்கேயே தான் இருக்கும். அதைச் சுட்டிக்காட்டி அதைப்பற்றி மீண்டும் வனத்துறையுடன் பேசி இந்தத் திட்டத்தை விரைவிலே கொண்டுவர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மின்சாரத்தை எப்படி வேண்டுமானாலும் உற்பத்தி செய்து கொள்ளலாம், ஆனால் சிங்கவால் கொண்ட மகால் குரங்குகளை நாம் நினைத்தால் உற்பத்தி செய்ய முடியாது.

திரு. வ. சத்தியமூர்த்தி : இந்த மின்சாரத் திட்டத்தின் மின் உற்பத்தி மதிப்பீடு எவ்வளவு? இதனால் பயன்பெற இருக்கும் பகுதிகள் எவையெவை என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே அறிவித்திருக்கிறோம். இந்தத் திட்டத்தின் மூலம் 65 மெகாவாட் கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவரவர்களே, மனிதர்களுக்கு மின்சாரம் முக்கியமான தேவையாக இருக்கும் பொழுது அதைவிட குரங்குகள்தான் முக்கியம் என்பதுபோன்று அமைச்சரவர்களின் பதில் எதிரொலிக்கிறது ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குரங்குகள் முக்கியம் என்று அவர்கள் சொல்லவில்லை. குரங்குகளை உற்பத்தி செய்வது கஷ்டம் என்று சொல்கிறார்கள். அமைச்சரவர்கள் சொன்ன பதிலையே உறுப்பினரவர்கள் மாற்றிவிடக் கூடாது. அமைச்சரின் பதிலைக் கேட்டுவிட்டு உறுப்பினரவர்கள் கேள்வியைக் கேட்க வேண்டும். உறுப்பினரவர்கள் சொல்வதைப் பார்த்தால் மனிதர்களைவிட குரங்குகளுக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது என்ற பொருள் வந்துவிடும்.

[1981 பிப்ரவரி 4]

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவரவர்களே, குரங்குகளை அழிக்கக் கூடாது என்பதற்காகக் காடுகளை அழிக்கக் கூடாது என்று அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். தமிழ்நாட்டில் மின்சாரத் தேவை அதிகமாக இருப்பதால் மின்சாரத்திற்கு முதலிடமும், அதற்கடுத்து குரங்குகளுக்கு இரண்டாவது இடமும் தருமாறு கேட்டு அதற்கு அமைச்சரவர்களின் பதில் என்ன என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

(பதில் இல்லை)

திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, 32 கோடி ரூபாய் மதிப்புள்ள மின்சார உற்பத்தித் திட்டமானது, சிங்கவால் குரங்குக்காக வேண்டி இன்னமும் பரிசீலனை செய்யப் படுகிறது என்று நீண்ட நாட்களாகச் சொல்லப்படு கிறது. சிங்கவால் குரங்குகளை வேண்டுமானால், வேறொரு இடத்தில் சரணாலயம் ஏற்படுத்தி உற்பத்தியை அதிகரிக்க ஏற்பாடு செய்து கொள்ளலாம். எனவே, 32 கோடி ரூபாய் திட்டம் அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்படுமா என்று கேட்க ஆசைப் படுகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மற்ற குரங்குகளுக்கும் இந்தக் குரங்குகளுக்கும் இருக்கின்ற விசேஷம் அதுதான். இந்தக் குரங்குகள் அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய களக்காடு சேங்சுரி— அந்தச் சரணாலயத்தில்தான் உயிர் வாழ முடியுமாம். அங்கே இருப்பவைதான் மழைக் காடுகள்— rains fed forest என்று சொல்கிறார்கள். ஆகவே, இந்தத் திட்டத்தை அங்கே அமல்படுத்தினால் அந்த அபூர்வ இனத்திற்கு ஆபத்து என்று வனத்துறை மட்டுமல்ல, Department of Environment and Planning என்ற துறையும் கருதுகிறது. நம்முடைய மின்சாரத் துறையும் இது சம்பந்தமாக வனத்துறையோடு ஏற்கனவே பேசியிருக்கி றார்கள். மீண்டும், உண்மையிலேயே அந்த இனம் அழிந்து விடுமா என்பதைப்பற்றி ஒரு திர்க்கமான முடிவெடுத்து அதற் குப் பிறகு இந்தத் திட்டத்தை அமல்படுத்தலாமா வேண்டாமா என்பதைப் பற்றி அமைச்சரவை முடிவெடுக்கும்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, மணிமுத்தாறு நீர்மின் திட்டப் பகுதியானது அந்த மலையின் மேல் பகுதி யாகும். களக்காடு சேஞ்சுரி கீழப் பகுதியில் இருக்கிறது. கோதையாறு பகுதியில்தான் அடர்த்தியான காடுகள் இருக்கின் றன. எனவே, மணிமுத்தாறு நீர் மின் திட்டத்தை அமல்படுத்து வதால் நிச்சயமாக இந்தக் குரங்குகளுக்குப் பாதிப்பு ஏற்படாது என்றே கருதுகிறேன். ஆகவே, இதைப்பற்றி மறுபரிசீலனை செய்து உடனடியாக அதைத் துவக்குவதற்கு ஏற்பாடு செய்யப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1981] பிப்ரவரி 4

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, பாதிப்பு ஏற்படுமா ஏற்படாதா என்பதைப்பற்றி நிபுணர்களே கருத்து வேறுபாடு கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அரசு இதைப்பற்றி நன்றாகப் பரிசீலித்து முடிவெடுக்கும்.

திரு. து. புருஷோத்தமன்: தலைவரவர்களே, இந்த அபூர்வ மான குரங்கினம் இந்தத் திட்டத்தால் அழிந்துவிடுமா என்பதைக் கண்டறிய சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்றை அமைத்து, அதை அங்கே அனுப்பி அந்த இனம் அழியாமல் இருப் பதற்கு ஆலோசனை கூறும்படி செய்வதற்கு இந்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, நான் சட்டமன்ற உறுப்பினர்களைப் பற்றிக் குறைவாகச் சொல் வதாகத் தயவு செய்து கருதக் கூடாது. நம்மைக் கண்டு அந் தக் குரங்குகள் ஓடி விடக் கூடாது.

திரு. என். பழனிவேல்: தலைவரவர்களே, இந்த மணி முத்தாறு நீர்மின் திட்டத்திற்கு மத்திய அரசு அனுமதி கொடுத்து விட்டதா? அல்லது இன்னும் அனுமதி கொடுக்கவில்லையா? அதேபோல, தமிழ்நாட்டிலுள்ள எந்தெந்த நீர் மின் திட்டங்க ளுக்கு மத்திய அரசு அனுமதியில்லாமல் காலதாமதம் ஏற்பட்டு வருகிறது என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இது திட்டக் குழுவின் பரிசீலனையில் இருக்கிறது, திட்டக் குழுவின் பரிசீலனையில் சுமார் பத்து திட்டங்கள் இருக்கின்றன அதைப்பற்றி மின்வாரிய நிதிநிலை அறிக்கை விவாதத்தின் பொழுதும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

*வினா எண். 163— திரு. பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியில் மேல் தாம்பிரபரணி நீர்மின் திட்டம் ஒன்று நிறுவ அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(ஆ) இது அரசின் பரிசீலனையில் உள்ளது.